# "முஸ்லிம் பிரதேச கலவன் பாடசாலைகளும் அவற்றினால் ஏற்படுகின்ற சமூகத்தாக்கங்களும்"

**Supervisor**
*Mr.M.H.M.Nairoos*
*Lecturer (Prob.)*
*Faculty of Islamic studies &*
*Arabic Language*

**Researcher**
*Mr. Azath*
*Department of Islamic Studies,*
*Faculty of Islamic studies &*
*Arabic Language*

இவ்வாய்வானது "முஸ்லிம் பிரதேச கலவன் பாடசாலைகளும் அவற்றினால் ஏற்படுகின்ற சமூகத்தாக்கங்களும்" என்ற தலைப்பில் ஒரு கள ஆய்வாக விளங்குகின்றது. அம்பாரை மாவட்ட, கல்முனை கல்வி வலையத்தில் அமையப் பெற்றுள்ள மருதமுனை பிரதேசமானது அதிகளவில் முஸ்லிம் கலவன் பாடசாலைகளைக் கொண்ட ஒரு பிரதேசமாகும்.

இங்கு வாழும் பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் போன்றவர்களை ஆய்வுக்குட்படுத்தி, முஸ்லிம் கலவன் பாடசாலைகளினால் ஏற்படுகின்ற சமூகத்தாக்கங்களை அடையாளப்படுத்தும் வகையில் இவ்வாய்வு அமையப் பெற்றுள்ளது. இவ்வாய்வுப்பரப்பானது இதுவரை எவராலும் பூரணமாக ஆய்வுக்குட்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மருதமுனை பிரதேச முஸ்லிம் கலவன் பாடசாலைகளின் பூர்வீகத்தை அறிந்துகொள்வதோடு, அது மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துகின்ற சமூகத்தாக்கங்கள் மற்றும் அதற்கான தீர்வுகளை அடையாளப்படுத்துதல், இப்பிரதேச பாடசாலைகளின் வரலாற்றையும் அதனால் ஏற்படுகின்ற தாக்கங்களையும் ஆவணப்படுத்துவதன் மூலம் எதிர்கால ஆய்வாளர்களுக்கு உதவுதல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வானது அமையப் பெற்றுள்ளது. இவ்வாய்வில் முதலாம் நிலைத்தரவுகளும், இரண்டாம் நிலைத்தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவுகளாக இப்பிரதேசத்தில் வசிக்கும் பெற்றோர்கள், மாணவர்கள் போன்றவர்களுக்கென்று தனித்தனியாக தயாரிக்கப்பட்ட வினாக்கொத்து பயன்படுத்தப்பட்டுள்ளன். இரண்டாம் நிலைத்தரவுகளாக வலையக் கல்வி பணிமனையின் அறிக்கைகள், பாடசாலை பதிவுத்திரட்டுப் புத்தகம், இவ்வாய்வு தொடர்பாக எழுதப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக்கட்டுரைகள், இணையத்தளங்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் வரலாற்று, சமூகவியல், பண்பு சார் ஒப்பீட்டு ஆய்வு முறைகள் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. பல தகவல்கள் 'Excel' மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

மேற்கண்ட பல தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு ஐந்து அத்தியாயங்களாக பிரிக்கப்பட்டு ஆராய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள தலைப்புகள் ஆய்வின் கருதுகோளுடன் தொடர்புபட்ட கருத்துக்களாக விளங்குகின்றன.

இவ்வாய்வின் முதலாவது அத்தியாயம்: ஆய்வு முன்மொழிவாக அமைந்துள்ளது. இரண்டாவது அத்தியாயம்: கல்வி பற்றிய கோட்பாட்டுரீதியான அடிப்படைகள் தொடர்பாகவும், மூன்றாவது அத்தியாயம்:

மருதமுனை பிரதேச முஸ்லிம்களின் பூர்வீக வரலாறு மற்றும் முஸ்லிம் கலவன் பாடசாலைகளின் தோற்றம் என்ற விடயங்களையும், நான்காவது அத்தியாயம்: இப்பிரதேச முஸ்லிம் கலவன் பாடசாலைகளினால் மாணவர்கள் மத்தியில் ஏற்படுகின்ற சமூக, கலாச்சார, ஒழுக்கவியல், பண்பாடு மற்றும் சமயரீதியான தாக்கங்களும் அதற்கான தீர்வுகள் பரிந்துரைகள் சம்பந்தமாககவும், ஐந்தாவது அத்தியாயம்: ஆய்வு தொடர்பான மதிப்பீடு மற்றும் முடிவுரை என்பவற்றை உள்ளடக்கி நிறைவு செய்யப்பட்டுள்ளது.

எனவே கருதுகோளினை மெய்ப்பிக்கும் வகையில் இவ்வாய்வானது சிறப்புற அமைய எல்லா வகையிலான முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வின் மூலம் பின்வரும் முடிவுகள் கிடைக்கப் பெற்றன. ஆண் பெண் தனிப்பாடசாலையாக பிரிக்க வேண்டும் என அதிகமான மாணவர்கள் விரும்புகின்றனர். சில மாணவர்கள் பிரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நிலை காணப்பட்டது. மேலும் இந்த ஆய்வின் போது அதிகமான ஆண் மாணவர்கள்தான் பாடசாலை பிரிப்பு சம்பந்தமாக அதிகளவிலான எதிர்ப்பை வெளியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதேபோன்று, பெற்றோர்கள் பாடசாலை பிரிப்புக்கு ஆதரவாக 80 வீதத்திற்கும் அதிகமானவர்கள் கருத்துக்களை முன்வைத்தனர். குறைவான தொகையுடையோரே பாடசாலை பிரிப்புக்கு ஆதரவு வழங்கினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதிலும் குறிப்பாக தொலைபேசிப் பாவனை மற்றும் காதல் வசப்படல் போன்ற விடயங்களுக்கே கூடுதலான தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். இதற்கான முக்கிய காரணம், முஸ்லிம் கலவன் பாடசாலைகளே எனக் குறிப்பிடுகின்றனர்.

எனவே மாணவர்களையும் மருதமுனையின் கல்வியையும் பாதுகாக்க வேண்டுமாக இருந்தால் முஸ்லிம் பாடசாலைகளை ஆண் பெண் தனிப்பாடசாலைகளாக பிரிப்பது காலத்தின் தேவையாகவும் சமூக சீர்கேட்டிலிருந்து விடுபட சிறந்த ஓர் மாற்றுவழியாகவும் அமையும் என்றால் மிகையாகாது. ஆகவே, இவ்வாய்விலிருந்து மருதமுனை பிரதேச முஸ்லிம் கலவன் பாடசாலைகளினால் சமூகத்திற்கும், தனிநபருக்கும் பாதகமான விளைவுகளே ஏற்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. எனவே அதனை பிரிப்பதுதான் சிறந்த சமூக உருவாக்கத்திற்கு வழிவகுக்கும் என்பது பெற்றோர்கள், மாணவர்கள் பெரும்பாலானோரின் கருத்தாகும்.

***Key Words:*** கலவன் பாடசாலைகள், மாணவர்கள், கல்வி, பெற்றோர்கள், சமூகத்தாக்கங்கள், மருதமுனை என்பனவாகும்.